# தூய மிக்கேல் அதிதூதர்

திருத்தல வரலாறு, நவநாள், மன்றாட்டுக்கள், பாடல்கள்



தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலம்

இராஜாவூர்

# தூய மிக்கேல் அதிதூதர்

திருத்தல வரலாறு, நவநாள், மன்றாட்டுக்கள், பாடல்கள்

(ஆயரின் அனுமதியுடன்)



தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலம்,

இராஜாவூர்.

# இராஜாவூர்
# தூய மிக்கேல் அதிதூதர்
# திருத்தல வரலாறு

அன்புடையீர்!

முத்தமிழும் முக்கடலும் முத்தமிடும் குமரி மண்ணில், நாகர்கோவிலுக்குக் கிழக்கே பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் சுசீந்திரம், தோவாளை என்னும் ஊர்களுக்கு நடுவே அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் மருத நிலப்பரப்பின் நடுவினிலே அதன் நெற்றித் திலகமாய் சிறப்புற்றுத் திகழும் நல்லூர் இராஜாவூர். கி.பி. 1542-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தூத்துக்குடி வந்திறங்கி 1545 வரை கிழக்குக் கடற்கரை, குமரிக் கடற்கரை மற்றும் திருவிதாங்கூர் கடற்கரைப் பகுதிகளில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்து கிறிஸ்தவ மறையை காலூன்றச் செய்த தூய பிரான்ஸிஸ் சவேரியாரால் மனந்திருப்பப்பட்ட கிறிஸ்தவர் களில் பலர் பல ஊர்களிலிருந்தும் பிழைப்புத்

தேடி இராஜாவூருக்கு வந்து குடியேறியதாக வரலாறு உள்ளது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதலே இராஜாவூர் இறைமக்கள் தூய மிக்கேல் அதிதூதருக்குச் சிறியதோர் ஆலயம் அமைத்து இறைவனை வழிபட்டு வந்துள்ளனர். கி.பி. 1918-ஆம் ஆண்டு கொல்லம் ஆயர் மேதகு பென்சிகர் ஆண்டகை அவர்களின் உதவியுடன் ஆலயம் பெரிதாகக் கட்டப்பட்டது. 1926-ஆம் ஆண்டு செப்டம்பர் 25-ஆம் நாள் இராஜாவூர் தனி பங்காகச் சிறப்பு பெற்றது. தற்போதைய அழகுறு ஆலயம் 08-12-1991 அன்று கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு லியோன் தர்மராஜ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, ஜூபிலி ஆண்டு 2000 மே மாதம் 6-ஆம் நாள் அர்ச்சிக்கப்பட்டுள்ளது. ஜூபிலி ஆண்டின் தொடக்கத்தில் கோட்டாறு ஆயர் லியோன் தர்மராஜ் அவர்கள் கோட்டாறு மறைமாவட்டத்தில் உள்ள ஏழு திருத்தலங்களில் ஒன்றாக இராஜாவூரையும் அறிவித்துள்ளார்கள். இவற்றுள் தனிச்சிறப்புப் பெற்று விளங்குவது இராஜாவூர் தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலமே.

இத்திருத்தலத்தில் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டு மருத்துவர்களால் கைவிடப் பட்டோர்க்கு நோயிலிருந்து நற்சுகம், பொல்லாத நோய்களின் சொல்லொணா தொல்லை களிலிருந்து விடுதலை, மன அமைதியைக் கெடுத்து குடும்பத்தை இருகூறாக்கும் மனநோயிலிருந்து மகிழ்ச்சிகரமான மாற்றம், குடும்பங்களை குழப்பத்தில் ஆழ்த்தும் பலவகைப் பிணிகள், பிரச்சனைகளுக்குப் பரிகாரத் தீர்வு ஆகிய புதுமைகள் அன்றாடம் நடைபெற்று வருகின்றன.

தூய மிக்கேல் அதிதூதரின் அருள்நாடி குமரிமாவட்டத்தின் பல்வேறு ஊர்களிலிருந்து மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதி களிலிருந்தும், கேரள மாநிலத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் பக்தர்கள் தினமும் இராஜாவூர் வந்து செல்கின்றனர். இத்திருத்தலத்தில் சிறப்புற்றுத் திகழும் தூய மிக்கேல் அதிதூதர் குருசடியில் பலவகை நோயாளிகள் தங்கள் பிணிகள் நீங்கி நலம் பெற நம்பிக்கையுடன் காத்துக் கிடக்கின்றனர்.

சனிக்கிழமைதோறும் மாலை **5.00** மணிக்கு நடைபெறும் நவநாள் திருப்பலியிலும், மாலை **7.30** மணிக்கு நடைபெறும் நவநாள் மற்றும் சிறப்பு நற்கருணை ஆசீர்வாதத்திலும், இரவு **11.00** மணிக்கு தூய மிக்கேல் அதிதூதர் குருசடியில் திருப்பயணிகளால் நடத்தப்படும் சிறப்பு செப வழிபாட்டிலும் கலந்துகொள்ள பல ஊர்களிலிருந்தும் மக்கள் விழாக் கூட்டமெனத் திரண்டு வந்து, நன்மைகள் பெற்றுச் செல்கின்றனர். சனிக்கிழமைகளில் சிறப்புப் பேருந்துகளும் பக்தர்களின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் மே மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை திருக்கொடியேற்றத்துடன் தொடங்கி பத்து நாட்கள் இத்திருத்தலத்தின் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழாவில் எண்ணற்ற மக்கள் கலந்துகொண்டு உடல், உள்ள நலம்பெற்றுச் செல்கின்றனர். அனைத்துச் சமயங்களின் சங்கமமாக நம்பிக்கையில் அணிதிரளும் பக்தர்கள் அடைகின்ற அற்புதங்கள் ஆச்சரியத்துக்குரியவையாகும்.

அன்றியும் நோயுற்றோரைப் பராமரிக்க தூய மிக்கேல் மருத்துவமனை, மனநோயாளிகளுக்குச் சிறப்பு மனநல மருத்துவ உதவி முதலியவையும் இத்திருத்தலத்தில் அமைந்துள்ளன. ஏழைகள் மற்றும் நோயாளிகள் மீது தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. பங்கின் வளர்ச்சிக்காக பங்கு அருட்பணிப் பேரவை, பங்கு நிதிக்குழு, 21 அன்பியங்கள், பல்வேறு பக்த சபைகள் மற்றும் இயக்கங்கள் சிறப்புடன் பணியாற்றி வருகின்றன. ஆலய கட்டுமானப் பணி நிறைவுபெற பங்கு மக்களும், திருப்பயணிகளும் தாராளமாக நன்கொடைகள் அளித்து வருகின்றனர்.

இத்திருத்தலத்திற்கு நீங்களும் வந்து இறையாசீர் பெற்றுச் செல்ல உங்களை அன்புடன் அழைக்கிறோம். இறை ஆசீர் உங்களுடன் இருப்பதாக!

அன்புடன் அழைக்கும்
**பங்குத்தந்தை, பங்குப் பேரவை**
**மற்றும் பங்கு இறைமக்கள்**

# தூய மிக்கேல் அதிதூதர் நவநாள் செபங்கள்

## 1. நுழைவுக் கீதம்

(எழுந்து நிற்போம்)

**திருப்பாடல் 122**

ஆண்டவரின் இல்லம் செல்வோம் என்று
சொன்னதைக் கேட்டு அகமகிழ்ந்தேன்

எருசலேம் ஒருங்கே
இணைந்துள்ள நகராக உள்ளது
ஆண்டவரே உமது திருப்பெயரைப் போற்ற
இறைவனின் குலத்தார்
அங்கே ஏறிச் சென்றார்கள்

உன் மதில்களுக்குள் அமைதியும்
உன் அரண்களில்
செழுமையும் இருப்பதாக
ஆண்டவரை நம்பினோர்
சீயோன் மலை போல் விளங்குவார்கள்

## திருப்பாடல் 24

ஆண்டவர்தம் மலைமீதினிலே
எவரே ஏறி சென்றிடுவார்
அவர்தம் தூய தலத்தினிலே
சென்று நிற்கத்தக்கவர் யார்?
பூமியும் அதில் நிறை எப்பொருளும்
இறைவன் உடைமை இவ்வுலகும்
எங்கணும் வாழும் உயிர்களுமே
அவர் தம் உடைமை அறிந்திடுவீர்

ஏனெனில் கடல்களின் மேல் அதனை
நிலையாய் நிறுத்தினவர் அவரே
ஆறுகள் மேலே உறுதியுடன்
அதை நின்றிடவே செய்தனரே

## திருப்பாடல் 95

ஆண்டவரில் தினம் அகமகிழ
ஆனந்தமுடனே வருவீரே

நம்மை நாமே படைக்கவில்லை
உண்மைதானே மறுக்கவில்லை

படைத்த தேவன் புகழ்மணக்க
பாரோர் வருக பலி சிறக்க

பாதை காட்டும் ஆயன் அவர்
பாடல் போற்றும் நேயன் அவர்
ஆட்சி செய்யும் ஆண்டவரின்
மாட்சி தனையே புகழ்வோமே

**திருப்பாடல் 96**

ஆண்டவரில் அகமகிழ்வோம்
அனைவருமே வருவீரே
நம் மீட்பின் அரணாகும்
அவரில் அக்களித்திடுவோம்

புகழ்பாடி அவர்திருமுன்
சென்றிடுவோம் வாருங்கள்
பாடல்கள் இசைத்து அவர்
முன்னிலையில் மகிழ்ந்திடுவோம்

ஏனென்றால் ஆண்டவரே
மாட்சிமை சேர் இறைவனவர்
தேவர்கள் அனைவருக்கும்
பேரரசர் ஆனவரே

## 2. தூய மிக்கேல் அதிதூதரை நோக்கி மன்றாட்டு

(முழந்தாளிடுவோம்)

தூய மிக்கேல் அதிதூதரே / இறைவனின் அணியில் புகழ்பெற்றவரே / தேவதூதர்களின் தலைவரே / இறைவனுக்கு எதிராக எழும்பிய அலகைகளை / எதிர்த்துப் போர்புரிந்து / அவைகளது ஆணவத்தை அடக்கி / நித்திய நரகத்தில் தள்ளிய வானவர் தலைவரே / இறைவன் சித்தத்திற்கு என்றும் அமைந்து / தாழ்ச்சியில் உயர்ந்து / புகழ்பெற்ற அதிதூதரே / மனிதரைப் படுகுழியில் தள்ளிப் பழிவாங்கக் கொதித்தெழும் / பசாசின் முயற்சிகளைத் தகர்த்தெறிந்து / இறைமக்களை வல்லமையுடன் பாதுகாக்கும் காவலரே / இறைமக்களுக்கு எண்ணற்ற நன்மை செய்பவரே / எங்களை உமது பாதுகாவலில் வைக்கிறோம். / பசாசின் பிடியிலிருந்து / எங்களை விடுவித்தருளும். இறைவனில் நாங்கள் என்றும் நிலைத்திருக்க / எங்களுக்காக மன்றாடும் ஆமென்.

குரு : தூய மிக்கேல் அதிதூதரே*

குரு : இறைவனுக்கு ஏவல் புரிந்து அவர் புகழ்பாடும் வானதூதர் அணியின் தலைவரே*

குரு : இறைவன் சித்தத்திற்கு அமைந்து உயர்வு பெற்றவரே*

குரு : தாழ்ச்சியின் எடுத்துக்காட்டாக விளங்கிய தூதர் தலைவரே*

குரு : இறைவனுக்கு நிகர் யார்? என்று முழக்கம் செய்து போர்புரிந்த வீரரே*

குரு : லூசிஃபரையும் அவனது தோழர்களையும் நித்திய நெருப்பில் தள்ளிய வீரரே*

குரு : விசுவாசிகளின் உறுதுணையான வானதூதரே*

குரு : பசாசுக்கள் மனிதர்மேல் செய்யும் சூழ்ச்சிகளைத் தகர்த்தெறியும் வல்லமைமிக்க வீரரே*

---

* எல் : ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

குரு : துன்பங்களினின்று மக்களைக் கை தூக்கும் அதிதூதரே*

குரு : இறைவனில் எங்களைப் பராமரிக்கும் அன்புத் துணைவரே*

## 3. மறைநூல் வாசகம், மறையுரை

## 4. வேண்டுதல் கீதம்

(எழுந்து நிற்போம்)

**திருப்பாடல் 25**

ஆண்டவரே உம்மை நோக்கி
எனது ஆன்மாவை எழுப்பினேன்

என் சர்வேசுரா உம்மிடத்தில்
நம்பிக்கை வைக்கிறேன்
நான் வெட்கப்படும்படி விடாதேயும்
என் எதிரிகள் என்னை
ஏளனம் செய்ய விடாதேயும்
உம்மை நம்பும் எவரும்
வெட்கம் கொள்ள மாட்டார்கள்

## திருப்பாடல் 54

இதோ இறைவன் துணைபுரிகின்றார்
ஆண்டவர் என் ஆன்மாவை ஆதரிக்கின்றார்

தீமைகளை நான் அகற்றிவிட
துணைபுரியும் இறைவா
நீர் தந்த உண்மை வாக்கின்படி
எம்மை வழிநடத்தும்

## திருப்பாடல் 141

தூபம்போல் என்செபம்
உம்மை நோக்கி எழும்பாதோ
வான் நோக்கி எழும்பும் என்
கரங்கள் பலியாகாதோ

ஆண்டவரே உம்மை நோக்கி
கூவுகிறேன் அறியீரோ
எனக்குதவ விரைவீரே
என் குரலைக் கேட்பீரே

## 5. வேண்டுதல் மன்றாட்டு

அன்பு சகோதர சகோதரிகளே! தூய மிக்கேல் அதிதூதரின் பாதுகாவலில் குழுமியிருக்கும் நாம், அவரது வல்லமையுள்ள வேண்டுதலில் நம்பிக்கை கொண்டு, நமக்கு வேண்டிய நலன்களைத் தாராளமாகப் பெற்றுக்கொள்ள, அவர் வழியாக அன்புக் கடவுளை மன்றாடுவோமாக.

குரு : இறைவன் தன் சுதனை அறிவித்தபோது / மனிதனாகப் பிறந்த அவருக்கு சிரம் தாழ்த்தி பணிந்து வணங்கிய /தூய மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் / நாங்கள் இறைமகன் இயேசுவை விசுவசித்து / எங்கள் வாழ்க்கையில் அவரை ஏற்று / நல்வாழ்வு வாழ எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று*

---

* எல் : ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

குரு : பசாசின் சோதனைகளால் துன்பப்படும் நாங்கள் / அவைகளை முறியடித்து வெற்றி முரசு கொட்டிய / தூய மிக்கேல் அதிதூதரின் துணையால் / ஆறுதலும் தைரியமும் அடைந்து / பசாசினால் எங்களுக்கு வரும் இன்னல்களிலிருந்து / விடுதலை பெற வேண்டுமென்று*

குரு : பசாசின் அடிமையாகி / அதற்கு ஏவல்புரியும் மனிதர்கள் / பசாசுக்களை நடுநடுங்கச் செய்யும் / தூய மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் / அந்த அடிமைத் தனத்திலிருந்து விலகி / இறைவன் ஒருவருக்கே சேவை செய்ய / அருள்புரிய வேண்டுமென்று*

குரு : மனித குலத்தின் பகைவனாகிய பசாசின் வல்லமையினால் / பிறருக்குத் துன்பம் விளைவிக்கும் மனிதர்கள் / இறைவனின் உன்னத

---

* எல் : ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

வல்லமையை நிலைநாட்டப் / போர்புரிந்து வெற்றி கண்ட தூய மிக்கேல் அதிதூதரின் மன்றாட்டினால் / இறைவனின் அளவற்ற வல்லமையை உணர்ந்து / பிறர் நலம் பேணி / நன்மை செய்துவாழ அருள்புரிய வேண்டுமென்று*

குரு : உடல் நோயாலும் மன நோயாலும் அவதிப்படும் உம் மக்களுக்கு / வல்லமைபடைத்த வானவர் படைத் தலைவர் / தூய மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் / உள்ளும் புறமும் முழுநலம் அளித்து / ஆசீர் அருள வேண்டுமென்று*

குரு : பசாசின் ஏவுதலால் சித்தம் சிதறி நிற்கும் உம் மக்களை / தூய மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் / சித்தம் தெளிந்து, நல்லறிவு பெற்று,

---

* எல் : ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

/ உண்மையைக் கடைப்பிடித்து வாழ அருள்புரிய வேண்டுமென்று*

குரு : தூய மிக்கேல் அதிதூதரின் வழியாக / நாங்கள் உம்மிடம் கேட்கும் எங்கள் மன்றாட்டுகளுக்கு / இரக்கமுடன் செவிசாய்த்து / எங்கள் ஆன்மாவுக்கும் சரீரத்துக்கும் தேவையானவற்றை / தந்தருள வேண்டுமென்று*

குரு : சிலுவையில் தொங்கிய உம் திருச்சுதனைப் பார்த்து / எங்கள் துன்பங்களை நன்மனதுடன் ஏற்று / அதனால் இன்முகத்துடன் வாழ அருள்புரிய வேண்டுமென்று*

குரு : நாங்கள் இவ்வுலகில் உமக்கு உகந்த வாழ்க்கை- நடத்தி / பரலோகத்தில் உம்மோடு என்றும் வாழ / எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று*

*(பக்தர்களின் விண்ணப்பங்களை வாசித்தல்)*

---

* எல் : ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

குரு : நம் தனிப்பட்ட தேவைகளுக்காக தூய மிக்கேல் அதிதூதர் வழியாக இறைவனிடம் மௌனமாக செபிப்போம்.

*(சிறிது நேர மௌனம்)*

குரு : எல்லாம் வல்ல இறைவா மனுக்குல மீட்பரே! இறைவனுக்கு நிகர் யார்? என்ற போர்க்குரல் எழுப்பி, உமது மேலான மகிமைக்காகப் போர்புரிந்து, பசாசின் கொட்டத்தை அடக்கிய தூய மிக்கேல் அதிதூதரின் மன்றாட்டினால், பேயினால் எங்களுக்கு வரும் துன்பங்களிலிருந்து எங்களை விடுவித்து எங்களது உள்ளத் திலும் உடலிலும் உள்ள நோய்களைப் போக்கி, நாங்கள் உம்மையே என்றும் வாழ்த்தி, உமதன்பில் நிலைத்திருக்கச் செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வழியாக உம்மைத் தாழ்மையாக மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்

## ௬. நன்றிக் கீதம்

(எழுந்து நிற்போம்)

### திருப்பாடல் 40

ஆவலுடன் நான் ஆண்டவர்க்காகக் காத்திருந்தேன், அவரும் என்னைக் கனிவாகக் கண்ணோக்கினார்

என் குரலுக்கவர் செவிகொடுத்தார்
எழுந்திட எனக்கவர் கைகொடுத்தார்
பாறையில் கால்களை ஊன்றச் செய்தார்
பாதையில் துணைவரும் காவலானார்

### திருப்பாடல் 23

ஆண்டவர் என் ஆயன்
ஆதலின் குறையில்லை
ஆண்டவர் என் ஆயன்
தண்ணீரும் புல்வெளியில் திளைத்திட மேய்த்து
தண்புலனும் காட்டித் தணித்திடுவார் தாகம்

சாவின் கொடுநிழல் சூழ்ந்தாலும் பயமில்லை
ஆயனின் வளைகோலே அடியேனின் தஞ்சம்
ஏவுகணை எதுவும் எடுக்காது என் உயிரை
மாவேந்தன் எந்தன் மருங்கில் இருப்பதால்

## திருப்பாடல் 150

உலகிலுள்ள உயிர்களே
இறைவனை நீர் புகழுவீர்

ஆண்டவர்தம் கோயிலில்
என்றும் அவரை வாழ்த்துவோம்
இனிய அவரின் அரியணை
முன்பு புகழ் கூறுவோம்
ஏற்றம் கொண்ட செயல்களின்
ஏந்தலை நாம் வாழ்த்துவோம்
எல்லை இல்லா மேலவர்
என்றும் அவரைப் புகழுவோம்.

## 7. நன்றி மன்றாட்டு

அன்பு சகோதர சகோதரிகளே! தூய மிக்கேல் அதிதூதரின் வல்லமையுள்ள மன்றாட்டினால், எல்லாம் வல்ல இறைவன் நமக்கு அருளிய ஆன்ம சரீர நன்மை களுக்காக தாழ்மையுடன் அவருக்கு நன்றி கூறுவோமாக.

குரு : படைப்புக்களின் சிகரமாக மனிதனைப் படைத்து / அழியாத ஆன்மாவை அவனுக்கு அளித்து / உம் வாழ்வில் அவன் பங்குகொள்ள அருள் செய்ததற்காக*

குரு : சிலுவையில் பலியாகி, எங்களை மீட்டு / உம் மக்கள் ஆக்கியதற்காக*

குரு : பசாசின் சோதனைகளிலும், சூழ்ச்சி களிலுமிருந்து / எங்களை விடுவித்துக் காத்ததற்காக*

---

* எல் : ஆண்டவரே நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம்.

குரு : ஆன்ம சரீர ஆபத்துக்களிலிருந்து / உம் பரிவிரக்கத்தால் எங்களைக் காப்பாற்றி யதற்காக*

குரு : உடல் நோயாலும் மன நோயாலும் வருந்திய எங்களுக்கு / ஆறுதல் அளித்து குணப்படுத்தியதற்காக*

குரு : எங்கள் துன்பங்களையும், வேதனை களையும் / உமக்காக அன்புடன் ஏற்றுக்கொள்ள / பொறுமையும், தைரியமும் அளித்ததற்காக*

குரு : நாங்கள் உமது அன்பையும் ஆதரவையும் உணர / அருள் புரிந்ததற்காக*

குரு : தூய மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் நாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக*

*(திருப்பயணிகளின் நன்றியறிதல்களை வாசித்தல்)*

---

* எல் : ஆண்டவரே நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம்.

குரு : நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அடைந்துள்ள உதவிகளுக்காக தூய மிக்கேல் அதிதூதர் வழியாக இறைவனுக்கு மௌனமாக நன்றி கூறுவோம்.

*(சிறிதுநேர மௌனம்)*

குரு : எல்லாம் வல்ல இறைவா! அனைத்தையும் அன்பினால் ஆள்பவரே! தூய மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலினால் நாங்கள் பெற்றுக்கொண்ட அனைத்து நன்மை களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். நாங்கள் என்றுமே உம்மைப் போற்றி உமக்கு உகந்த மக்களாக வாழக் கிருபை செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

## 8. நோயாளிகளை ஆசீர்வதித்தல்

குரு : (வலது கரத்தை நீட்டி) ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து உங்களைப் பாதுகாக்க உங்கள் நடுவிலும், உங்களைக் காப்பாற்ற உங்களுக்குள்ளும், உங்களுக்கு வழிகாட்ட உங்களுக்கு முன்னும், உங்களுக்கு காவலாயிருக்க உங்களுக்குபின்னும், உங்களை ஆசீர்வதிக்க உங்கள் மேலும் இருப்பாராக.

† பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே,

எல் : ஆமென்.

**தீர்த்தம் தெளித்தல்** (ஈசோப்புல்லினால் . . .)

குரு : ஆண்டவருடைய பெயராலே நமக்கு உதவி உண்டு.

எல் : அவரே விண்ணையும் மண்ணையும் படைத்தவர்.

குரு : ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்.

எல் : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல் : உம்மோடும் இருப்பாராக

குரு : **மன்றாடுவோமாக :** எல்லாம் வல்ல தந்தையே! என்றும் வாழும் இறைவா! நோயினால் வருந்துவோருக்கு உமது ஆசீர்வாதத்தின் அருளைப் பொழிவதால் உம் படைப்புகளை இரக்கப் பெருக்கத் தால் காப்பாற்றுகின்றீர். உமது திருப்பெயரைக் கூவியழைத்ததும் தயவாய் உதவ வாரும். உம் அடியார்களை நோயினின்று விடுவித்துக் குணப்படுத்தி, உமது வலக்கரத்தால் தூக்கிவிட்டு, பலத்தால் உறுதிப்படுத்தி, வல்லமையால் காப்பாற்றி, விரும்பிய எல்லா

நலன்களுடன் உமது அன்பில் நடத்தியருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## தூய மிக்கேல் அதிதூதரின் புகழ்மாலை

ஆண்டவரே இரக்கமாயிரும் - 2
கிறிஸ்துவே இரக்கமாயிரும் - 2
ஆண்டவரே இரக்கமாயிரும் - 2
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்.

பரலோகத்தில் இருக்கிற பிதாவாகிய இறைவா - எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா - எங்களை . . .

தூதர்களின் அரசியான தூய மரியாளே
- எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
தூய மிக்கேல் அதிதூதரே
- எங்களுக்காக . . .

இறைவனின் ஞானம் நிறைந்தவரான தூய மிக்கேலே *

தாழ்ச்சியின் கண்ணாடியான தூய மிக்கேலே*

கீழ்ப்படிதலைத் தூண்டுகிறவரான தூய மிக்கேலே*

இறைமகனைப் பக்தியுடன் ஆராதிக்கிறவரான தூய மிக்கேலே*

இறைவனின் சேனையின் சிறந்த தலைவரான தூய மிக்கேலே*

மகிமையாலும் பெருமையாலும் சூழப்பட்டவரான தூய மிக்கேலே*

மூவொரு இறைவனின் விருது ஏந்திய தூய மிக்கேலே*

---

* எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

விண்ணக அரசின் அதிபதியான தூய மிக்கேலே*

அமைதியின் தூதரான தூய மிக்கேலே*

இஸ்ரயேல் மக்களின் வழிகாட்டியும் ஆறுதலுமான தூய மிக்கேலே*

யூத சபையின் கொத்தளமாகிய தூய மிக்கேலே*

உத்தரிக்கிற சபையின்தேற்றரவாகிய தூய மிக்கேலே*

விண்ணக சபையின் மகிமையும் மகிழ்ச்சியுமான தூய மிக்கேலே*

வானதூதர்களின் ஒளிநிறை தலைவராகிய தூய மிக்கேலே*

நம்பிக்கைக் கொண்டோரின் கோட்டை அரணான தூய மிக்கேலே*

அன்புக்கும் ஒற்றுமைக்கும் நல் உறவான தூய மிக்கேலே*

---

* எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பக்தர்களின் எதிரொலியான தூய மிக்கேலே*

மரண வேதனையுறுவோருக்கு நம்பிக்கை தருபவரான தூய மிக்கேலே*

இறுதித் தீர்ப்பை அறிவிக்கிறவரான தூய மிக்கேலே*

எல்லா ஆபத்துக்களிலும் உதவி செய்கிற வரான தூய மிக்கேலே*

தொடக்கம் முதல் தாழ்ச்சியினால் இறையரசைப் பாதுகாக்கிறவரான தூய மிக்கேலே*

தூதர்களால் வணங்கப்படுகின்ற தூய மிக்கேலே*

தூய ஆவியினால் பெரியவரென்றும் வல்லவரென்றும் சான்றுரைக்கப்பட்ட தூய மிக்கேலே*

உம்முடைய மன்றாட்டினால் எங்களை விண்ணகம் சேர்க்கிறவரான தூய மிக்கேலே*

---

* எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஆத்துமங்களின் மீட்பைக் கண்காணிக்க இறைவனால் நியமிக்கப்பட்டவரான தூய மிக்கேலே*

முக்கிய தலைவர்களில் ஒருவராகவும் ஒப்பற்ற பெருந்தலைவராகவும் வேத நூல்களில் புகழப்பட்ட தூய மிக்கேலே*

இறைமக்களுக்கு ஆதரவான தூய மிக்கேலே*

எங்கள் தலைவரான தூய மிக்கேலே*

எங்களை ஆதரிக்கிறவரான தூய மிக்கேலே*

உலகின் பாவங்களை போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே,
- எங்கள் பாவங்களைப் போக்கியருளும் ஆண்டவரே

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே,
- எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் ஆண்டவரே

---

* எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே

- எங்கள் மேல் இரக்கமாயிரும் ஆண்டவரே

முதல் : எங்கள் ஆண்டவராகிய இறைவனிடத்தில்

துணை: தூய மிக்கேல் அதிதூதரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**மன்றாடுவோமாக**

வான தூதர்களுக்கும், மனிதர்களுக்கும் உரிய பணிகளை வியப்புக்குரியவிதமாய் நடத்திக் கொண்டுவரும் என்றும் வாழும் இறைவா விண்ணில் உமக்கு எப்போதும் பணிபுரியும் தூதர்களால் இவ்வுலகில் எங்கள் வாழ்வை பாதுகாக்கும்படி அருள்கூரும். இந்த வேண்டுதலை எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் திருமுகத்தைப் பார்த்து எங்களுக்கு தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

- ஆமென்.

## தூய மிக்கேல் அதிதூதர் மன்றாட்டு (நவநாள்)

வானுலக சேனைத் தளங்களின் அதிபதியே! சதா ஜீவ அரூபிகளில் மகிமைப் பிரதாபம் நிறைந்த சம்மனசானவரே! அவர்களிலும் உத்தமமானவரே! உன்னத கடவுளின் மந்திராலோசனை நிர்ணயப் பெட்டகமே! தேவ சிம்மாசனத்தருகே நிற்கப் பேறு பெற்ற பிரபுவே! தேவ கட்டளைப்படியே பரலோக வாசலைத் திறக்கவும் பூட்டவும் அதிகாரம் உள்ள வானவரே! தேவநீதி சிம்மாசனத்தண்டையில் எங்கள் ஆத்து மாக்களைச் சேர்ப்பிக்கும் தூதாதி தூதரே! மரண அவஸ்தைப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய தீவிரித்தோடிவரும் உபகாரியே! மரித்தவர்களின் ஆத்துமங்களை அழைத்துக் கொண்டு போய் திவ்ய கர்த்தரின் சந்நிதியில் சேர்ப்பிக்கும் காவலரே! பலவீனனும் நிர்ப்பாக்கி யனுமாகிய அடியேனைக் கிருபாகடாட்சமாய் பார்த்து என் ஜீவிய காலம் முற்றிலும்

விஷேசமாய் மரண தருவாயிலும் எனக்கு உமது தயை நேச உதவி புரிந்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறேன். - ஆமென்.

## தூய மிக்கேல் அதிதூதர் மன்றாட்டு

தூய மிக்கேல் அதிதூதரே, உலகம் உடல் அலகையுடன் போர்புரியும் ஆற்றலை எமக்களித்து அலகையின் சூழ்ச்சிகளிலிருந்து எம்மைக் காத்தருளும். இறைவனுக்கு நிகர் யார்? எனக் குரலெழுப்பி, அலகையின் கொட்டத்தை அடக்கி, நித்திய நெருப்பில் தள்ளிய வானதூதரே, எங்கள் இறுதி நாளில் எங்களைக் கைவிடாமல் காத்தருளும். மேலும் இறைவனிடம் பரிந்து பேசி எங்களுக்குத் தேவையான இந்த . . . . . . . . . வரங்களைப் பெற்றுத் தாரும். இறுதியில் அவரை உம்முடன் முடிவின்றி கண்டுகளிக்க உதவி செய்யும். ஆமென்.

ஒரு பர-ஒரு அருள்- ஒரு பிதா

தூய மிக்கேல் அதிதூதரே
- எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

# தூய மிக்கேல் அதிதூதர் பாடல்கள்

1

வானவர் தலைவோனே - எங்கள்
வாழ்க்கையின் காவலனே - இந்த
திருத்தலம் இராஜாவூரினிலே என்றும்
சிறப்புறும் அதிதூதரே
கடவுளின் நிகர் யாரோ - என்றும்
கனியொரு பெயரோனே - என்றும்
காசினி வாழ்ந்திடு மானிடர் ஈசனின்
தாசர்களாய் அருள்வாய்

அலகையை வென்றவனே - நாளும்
அகிலத்தின் காவலனே இன்று
அலகையின் வலையினைக் கிழித்தெறிந்து
- நன்றே
உலகினைக் காத்திடுவாய்

அலகையுடன் போரிடுவோம் - ஏசு
அரசினை நாட்டிடுவோம் - எங்கள்
சேனையின் காவலனாய் திகழ் - வானவ
மிக்கேல் அதிதூதனே

## 2

உன்னருள் தேடி உளம் மிகவாடி - உன்
ஆலயம் வந்தோம் ஒன்றாகக்கூடி
உன்னருள் தேடி வந்தோமே
உலகினைத் தாக்கி இன்னல்கள் விளைக்கும்
அலகையை வெல்லும் மிக்கேல் ஐயனே

கரத்தில் தராசு கனிவுடன் ஏந்தி
கால்களில் பசாசை வீரமாய் மிதித்து
வந்தவர்க்கெல்லாம் வாரியே வழங்கும்
வள்ளலாய் விளங்கிவான் புகழ்பெற்ற
எத்தனை தூரம் நின்று யாம் வந்தோம்
எத்துணை உள்ள வேதனை கண்டோம்
நித்திய இறைவனின் சத்திய தூதா!
நித்தமும் நின்னருள் நிலைத்தால் போதும்

## 3

பாடுவோம் நம் மிக்கேலின் திருப்புகழை
பாரிலெல்லோரும் ஒன்றாய்ப் பாடுவோம்.

வாழ்க வாழ்க தேவதூதன்
என்றென்றும் வாழ்க (2)

எந்நாளும் இறைவனை நாடி நின்று
இறைவனுக்கிணையாவோர் இல்லை என்று
தெய்வம் தொழாப் பேயினைப் போரில்வென்று
தேய்வுஇல்லாத இன்பம் பெற்றார் என்று
- வாழ்க

ஆனந்தம் பொங்கிடக் கூடி வரும்
எண்ணற்ற மக்களுக்கின்பம் வரும்
வந்த பிணி எல்லாம் தீர்ந்து விடும்
வெந்த உள்ளங்கள் எல்லாமே ஆறிவிடும்
- வாழ்க

விண்ணகத் தந்தையின் திருமுன்னே
பொன்தூபம் ஏந்தி நில் தூதுவரே
உம்மோடு நாம் இறைபுகழ் பாட வேண்டும்
உள்ளத்தை மீட்டி அவர் புகழ் கூற வேண்டும்

## 4

மகிழ்ந்திடு மகிழ்ந்திடு மாநிலமே
புகழ்ந்திடு புகழ்ந்திடு வான் அதிர
வானவர் தலைவன் மிக்கேல் வழியாய்
வரம் பல தந்தார் இறைவன் என்று

பணிந்து வாழ வந்தவர் கிறிஸ்து
புனிதம் அதிலே பெறச் சொன்னார்
பணிந்து வாழ்ந்து புனிதம் பெறவே
புனித மிக்கேலின் துணை வேண்டும்

ஒளியும் இருளும் இணைந்து வாழ
உலகம் தன்னில் இடமில்லை
இறைவன் அலகை இரண்டும் தொழுது
இந்நிலம் வாழ்வதில் பொருளில்லை.

இறைவன் ஆற்றல் உலகம் தன்னில்
நிறைந்தது மிக்கேல் வழியாக
இறையருள் பெற்று குறையின்றி வாழ
கறையில்லா மிக்கேல் துணை வேண்டும்

5

அன்போடு நாம் பாடுவோம்
அருள் தேடி நாம் கூடுவோம்
திருநாளில் மாவேத நெறிஓங்க அருள் சூழ்ந்த
திருத்தூதன் புகழ் வாழ்கவே - 2
மாதூதன் மிக்கேலின் பெயர் போற்றினோம்

மாறா நின் கருணை தன் சீர் போற்றினோம்
உம் நாமம் என்றென்றும் தழைத்தோங்கவே
எந்நாளும் யாம் உந்தன் தாள் போற்றினோம்

நாட்டிற்கு வழிகாட்டி துயர் போக்குவோம்
ஏழைக்கு எந்நாளும் நலம் ஆக்குவோம்
உலகோர்க்கு இறையோனின்
அருள் கூட்டுவோம்
உயர்வான பொதுச்சேவை நாம் ஆற்றுவோம்

பாவத்தின் கறை நீங்க நாம் வாழுவோம்
பாசத்தின் பாங்கோடு உறவாடுவோம்
அறிவோடு நேர்மைக்கு அடிகோலுவோம்
மாதேவன் தாள் போற்றி நாம் வாழ்த்துவோம்

6

புகழ்வோம் புகழ்வோம்
புனித மிக்கேல் அதிதூதரை
வானவர் சேனையின் தலை சிறந்தவரை
மகிழ்வோம் மகிழ்வோம் மாண்புடனே

இறைவன் படைத்த தூதுவராம் - அவர்
இந்நிலம் காத்திடும் காவலராம்
அலகையின் வலையினை அறுப்பவராம்
ஆற்றல் மிகுந்த அதிதூதராம்
தீயப்பசாசை விரட்டிடுவார் - நமை
திடமாய் இறைவழி நடத்திடுவார்
ஆண்டிடும் அனைவரின் துயர் தீர்ப்பார்
அகிலம் வியக்கும் அருள் புரிவார்

உலக துன்பங்கள் வருத்திடினும் - நம்
உள்ளம் வேதனைக் கொண்டிடினும்
கனிவுடன் கரங்கள் நீட்டிடுவார்
கலங்கிடும் உள்ளங்கள் தேற்றிடுவார்

## 7

தூதரை வேண்டிடும் மனிதா
அவனியில் உன் குறை அகலும் - இனி
அவனியில் உன் குறை அகலும்

இறைவன் நிகரே இல்லை என்றார் -தீய
அலகையின் ஆணவம் வென்று விட்டார்

அகற்றிவிடு உந்தன் ஆணவத்தை
பெருமைதனை அகற்றிவிடு அகற்றிவிடு

கண்ணீர் கதைகள் கேட்டிடுவார் - இறை
அருளால் நலமும் அளித்திடுவார்
நடத்திவிடு உண்மை மறையின் வழியில்
உந்தன் வாழ்வை நடத்திவிடு நடத்திவிடு

தீராப்பிணிகள் தீர்த்து வைப்பார் - உந்தன்
மனதிற்கு அமைதி பொழிந்திடுவார்
புகழ்ந்துவிடு புனித மிக்கேல் புகழை
வாழ்நாளெல்லாம் புகழ்ந்துவிடு புகழ்ந்துவிடு

8

வானவர் தலைவனை வாழ்த்திப் பாடுவோம்
இறைவனின் நிகர் யார் என்று முழங்குவோம்
அதிதூதர் மிக்கேலின் புகழ்தனை அனைவரும்
மகிழ்வுடனே எத்திசையும்
எடுத்துச் சொல்வோம்

தாழ்ச்சியும் ஆணவமும் விண்ணில் போரிட
ஆணவம் அழிந்தது அலகை வீழ்ந்தது
அதிதூதர் அருளால் தீவினை மாய்ந்திடும்
மிக்கேலின் சன்னதியில்
இன்பங்கள் மலர்ந்திடும்

கடலின் அலைகள் ஒய்வதும் இல்லை
மிக்கேலின் அருளுக்கும் குறைவுமில்லை
சுடரொளி கதிரோன் இருளினை ஒழிப்பான்
விண்ணவன் கொடையால் பெருந்துயர் தீரும்

மருத்துவர் கைவிட்ட எத்தனை நோய்கள்
மனநோய் உடல்நோய் அலகையின் வினைகள்
மறைந்திடும் மகிழ்ந்திடும் அதிசயம் நிகழும்
கலங்கரை விளக்காய் அவர் புகழ் ஒளிரும்

9

வானவர் தலைவன் மாந்தரின் துணைவன்
மிக்கேல் அதிதூதன் புகழ் பாடுவோம்
ஆனந்தம் பொங்கும் மானிடர் உள்ளங்கள்
ஆனந்த கீதங்கள் முழங்கிடுவோம்
முழங்கிடுவோம் முழங்கிடுவோம்
ஆனந்த கீதங்கள் முழங்கிடுவோம்

இறைவனின் நிகர் யார் என்றே முழங்கி
ஆணவப் பேயின் தலையினை மிதித்தார்
தானைத் தலைவன் தாளினைப் பணிவோம்
தாளாத இன்பத்தினை தரணியில் பெறுவோம்

வானின்று வரங்களை மழையெனப் பொழிந்து
அண்டினோர் அனைவரின் துயர் நீக்கினார்
கடல் அலையாய் திரண்டிடும் மாந்தர்
மலையெனத் துயர்கள் பனிபோல் மாறும்

உடைந்த உள்ளங்கள் நொந்த மனங்கள்
தூதரின் அருளால் நலம் பெற்றிடும்
அலகை சோதனைப் பிணிகள் யாவும்
மறைந்திடும் எந்நாளும் மாநிலம் புகழும்

## 10

புதுமைகள் கோடி புரிந்திடும் எங்கள்
மிக்கேல் அதிதூதரே
புவிவாழ் மக்கள் அனைவரும் கூடி
பாடுவோம் உம் புகழை -2
எண்ணற்ற கோடி மாந்தர்கள் உம்மை
நாடி வருகின்றனர் - உம்மை

நாளும் புகழ்கின்றனர்
வந்தோர்க்கெல்லாம் நிறைவரம் தந்து
நாளும் காக்கின்றீர் நன்மைகள் புரிகின்றீர்
மெய்மறை மக்களை தன்வயமாக்க
வஞ்சகம் செய்கின்றது - உலகம்
தன் வலை விரிக்கின்றது
சோதனை வெல்லவும் துன்பங்கள் தாங்கவும்
நல்லருள் தருகின்றீர் எங்களைக் காக்கின்றீர்

## 11

திருவிழா பெருவிழா
இறைபுகழ் தருவிழா
புனித மிக்கேல் மகிழும் நன்னாள்
புது மகிழ்வு திகழும் பொன்னாள்

விண்ணுலகில் அன்று ஒரு போராட்டமாம்
தீமை செய்யும் தீய பேயின் வாலாட்டமாம்
வீரமிக்கேல் வெற்றி பெற்றார் பேய் ஓட்டமாம்
கூறவந்தார் இங்கு மக்கள்
பெருங்கூட்டமாம் - 2

நன்மை தீமை இரண்டினுக்கும் போராட்டமாம்
நன்மனதில் என்றும் ஒரு மாறாட்டமாம்
நல் இறைவன் பேரருளால் நன்மை வெல்லும்
நம் இறைவன் என்றும் இந்த
உண்மை சொல்லும் - 2

ஆயிரமாய் ஆயிரமாய் மக்கள் வந்தார்
ஆறுதலை தேறுதலை தேடி வந்தார்
ஆண்டவரின் தூதுவரும் அருகில் வந்தார்
அண்டியவர் குறையாவும் தீர்த்து வைத்தார் - 2

## 12

புனித மிக்கேல் அதிதூதர் புகழ் மணக்க
அவர் பொன்னடி பணிவோம் அருள் சிறக்க

வானகம் எங்கும் தாழ்மையின் உருவாம்
ஆணவம் கொண்டோரை
அழித்திடும் உயர்வாம்
ஆண்டவர் நாமம் அனைத்திலும் மேலாம்
அரிதாம் மிக்கேலின் அருங்குணம் பெரிதாம்

ஆலயம் வந்திடும் அடியவர் பலராம்
ஆங்காரம் பகைமையில் உழல்வதும் மிகவாம்
ஆயனை அடைந்திட அவசியம் தாழ்வோம்
அலகையை வீழ்த்திட அவனருள் துணையாம்

அகிலத்தைப் புரப்பது ஆண்டவன் அருளாம்
அலகையின் ஆட்டம் அவன்முன் வடிவாம்
அருள்பெரு தூதனின் தீரம் பெரிதாம்
அருள்துணை நமையென்றும்
காப்பது நிறைவாம்

13

புனித மிக்கேல் இறைதூதுவனே
காலமெல்லாம் உனைப்பாடுவேனே

பரமன் அளித்த பணி ஏற்றாய்
பாவி எனக்கு காவலனாய்
பகைவன் விரித்த வலைதனிலே
பட்டுவிடாமல் பாதுகாப்பாய்

துன்பம் சூழ்ந்த போதினிலும்
இன்பம் துய்க்கும் நேரத்திலும்
தூயவனே நீ துணையாவாய்
தூய மனமாய் வாழச் செய்வாய்

இறையின் ஒளியை அளித்திடுவாய்
மறையின் வழியில் நடத்திடுவாய்
அடியவனே நீ ஆட்கொள்வாய்
அன்பு வழியில் நடத்திடுவாய்

## 14

ஆனந்தம் பொங்கிட கூடிடுவோம்
அவனி எங்கும் கூறிடுவோம்
மிக்கேல் தூதர் வழியாக இறை
மிக்கவே செய்தார் அருளாக

ஆற்றல் நிறைந்த விண்ணவராம் - எம்
ஆலயம் சிறக்கும் காவலராம்
அவனி வாழ்வோர் இன்புறவே ஆ -ஆ- இறை
அருளை வேண்டிடும் துணைவராம்

ஆயிரம் பூசல்கள் புவியிலே அவை
அனைத்தும் ஆணவம் உருவிலே
மேகம் போன்று யாவுமே ஆ-ஆ-இனி
போகும் தூதன் முன்னாலே
மேகம் மழையை பொழிதல் போல் - நம்
மேலும் அருளைப் பொழியவே
மேவும் உலகத் துன்பமெல்லாம் ஆ-ஆ
மேலே இன்பமாய் மாறிடும்

## 15

வானதூதர் படையின் தலைவர்
புனித மிக்கேல் நமது காவல் சேனையின்
தலைவர் அவரிடம் செல்வோம் நாம்
அலகையை வெல்வோம்

உண்மை என்ற புண்ணியம்
நமது இடை கச்சை நீதி என்ற உயர் வழி
மார்பின் `கவசமாய்
சமாதான நற்செய்தி நமது மிதியடி -2
போரிடுவோம் நாம் போரிடுவோம்
வென்றிடுவோம் அலகையை வென்றிடுவோம்

மீட்பு என்ற இறையருள்
நமது தலை சீரா
ஆவி தந்த இறைவன் சொல்
நமது போர் வாளாம்
விசுவாசம் நம்பிக்கை நமது கேடயம்
போரிடுவோம் நாம் போரிடுவோம்
வென்றிடுவோம் அலகையை வென்றிடுவோம்

## 16

அலையெனக் கூடுவோம்
ஆனந்தமாய் பாடுவோம்
அதிதூதர் மிக்கேலின் சன்னிதி பணிவோம்
எண்ணரும் நன்மைகள் பெற்றே செல்வோம்
வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் பெறுவோம்
நாம் வாழ்த்துவோம் வணங்குவோம்
அவரை நாம் புகழுவோம்
அவரைப் புகழ்ந்தேத்துவோம்

அலகையின் பிடியில் தவித்திடும் உள்ளங்கள்
மாறாத நோயால் மாண்டிடும் மனங்கள்

அத்தனை உள்ளமும் திரண்டே வந்தோம்
தூதர்முன் பணிந்தோம் நலமும் பெற்றோம்

கவலையால் நலிந்தேன் கண்ணீர் வடித்தேன்
மனதிற்கு அமைதியும் இன்றியலைந்தேன்
வானவர் தலைவனின் தாளினைப் பணிந்தேன்
உடல் நலம் உளநலம் அமைதியுமடைந்தேன்

பொய்யாம் அலகையின் வழிதனை மறப்போம்
தூதரின் கருணையால்
தேவனைக் காண்போம்
உண்மை மறையின் வழிதனில் நடப்போம்
விண்ணக வாழ்வினைப் பெற்றிட விழைவோம்

## 17

விண்ணவர் சேனையதனிலே
விமலன் படையின் அணியிலே
தலைவனாய்த் திகழ் தூதனே
தரணி வாழ்வோம் காவலனே

புனிதத் தலைவா வாழ்க
புவியோர் காவலா வாழ்க
மானிடர் மகிழ்வே வாழ்க
மகிமைகொள் மிக்கேலே வாழ்க
வாழ்க வாழ்க உந்தன் புகழே வாழ்க

துன்பம் சூழும் உலகிலே
துயர் சூழும் பாரிலே
அலகை நாங்கள் வெல்லவே
அருளை எமக்குத் தாருமே - புனித

உம்மை நம்பி இவண் வரும்
எண்ணில்லாத மக்களெல்லாம்
உந்தன் அருளைப் பெற்றிடவே
உன்னதனை வேண்ட வேண்டும் - புனித

## 18

ஆனந்தம் பேரானந்தம்
அதிதூதரின் திருத்தலம் நாடிவந்தால்
மனத்துயர் நீங்கிடும் கவலைகள் மறைந்திடும்
அமைதியே வாழ்வினில் நிறைந்திடுமே
ஆணவம் கொண்ட அலகையின் செயலை

அகற்றியே இறையருள் புரிந்திடுவார்
அண்டிடும் மாந்தரின் பிணிகளையே
அகற்றியே வாழ்வில் துணையாவார்

ஏழைகள் வாழ்வில் ஏக்கம் தீர்த்து
அன்னையாய் அணைத்துக் காத்திடுவார்
தாழ்ச்சியில் தூதரை நாடி வந்தால்
வாழ்வில் உயர்வாய் விளங்கிடலாம்

உடலின் சோதனை உள்ளத்தின் வேதனை
உருக்கமாய் வேண்டினால் மறைந்திடுமே
நாடிடும் நலன்கள் நானிலம் பெறவே
அதிதூதர் மிக்கேல் அருள்வரம் தருவார்.

## திருத்தல நிகழ்வுகள்

### திங்கள் - புதன்

காலை 5.30 மணி: திருப்பலி

### வியாழன்

காலை 5.30 மணி: திருப்பலி
மாலை 7.30 மணி: நற்கருணை ஆராதனை


தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலம், இராஜாவூர், கன்னியாகுமரி மாவட்டம் - 629 402.
நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். ✆ : (04652) 233853